3 மே 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலத்தின் 4 ஆம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்: **நிறைவான வாழ்வு**



## அவர் நம்மை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லட்டும்

இன்றைய காலகட்டத்தில் நம்மில் எத்தனை பேர் நிறைவான வாழ்வு வாழ்கிறோம் என்று உறுதியாக கூறமுடியும்? நம்மில் சிலர் உலக செல்வங்களையும், மனித வாழ்வின் சாதனைகள், அல்லது அறிவாற்றல் இருந்தால் தான் நிறைவான வாழ்வு என்று கூறுவர்.

இன்னும் நம்முடைய அனைத்து பிரச்னைகள், கஷ்டங்களை பணத்தாலும், உலக செல்வங்கள் மற்றும் அனைத்து அறிவாற்றலாலும் தீர்க்கமுடியும் என்றும் கருதலாம்.

இன்றைய ஞாயிறு நற்செய்தி வாசகத்தில், வாழ்வை "நிறைவாக தருவேன்" (யோவான்:10:10) என்று இயேசு வாக்களிக்கின்றார். இந்த வார்த்தைகளைப் புரிந்துகொள்ள நமக்கு கிறிஸ்துவ முதிர்ச்சி வேண்டும். கிறிஸ்துவ நம்பிக்கை நம்மை கிறிஸ்துவின் பார்வையோடுப் பார்க்க அழைக்கின்றது. கடவுளை தாழ்ச்சியோடு முழுமையாக சார்ந்திருப்பதே நிறைவான வாழ்வு. இதைத் தான் இயேசு தாம் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார். நாம் எவ்வாறு இருக்கவேண்டும் என்று கடவுள் விரும்புகிறாரோ அவ்வாறு வாழ்வதே நிறைவான வாழ்வு. இதுதான் கிறிஸ்துவின் உண்மையான சீடனாக மாறுவது.

அவர் விடுக்கும் இந்த அழைப்பு, அவரை முழுமையாகச் சார்ந்திருக்கவும், அவருடைய சீடராக மாறவும், அவரோடு பந்தியில் அமரவும், அவரோடு இணைக்கப்படவும் ஒரு வாய்ப்பு. சகோதர சகோதரிகளே இந்த ஒன்றிப்பு தான், நிறைவான வாழ்வு வாழ நம்மை அனுமதிக்கிறது. அமைதியின் சமவெளிக்கு அவர் நம்மை இட்டுசெல்வார் என்று நம்புவோம். அவரின் வாயில்களின் வழியே நுழைந்து, நிறைவாழ்வை முழுமையாக வாழ்வோம். (யோவான் 10:9) வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறிச்செல்லும்போது, இந்த உலக செல்வங்கள் தருவதைப் போல் அல்லாமல், உண்மையான அமைதியும் முழுமையான நிறைவையும் நாம் பெற்றுக்கொள்வோம்.

இயேசு தாமே ஆட்டுக்கொட்டிலின் வாயில் என்று உறுதியளிக்கின்றார். அவர் வழியாய் நுழைவோருக்கு ஆபத்து இல்லை( யோவான்10:9) நாம் வழிதவறி தொலைந்துபோன ஆடுகளாக இருந்த போதிலும், தொடர்ந்து நம் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு அவரே நம் நல்ல ஆயன், என்று உறுதி கூறுகிறார். அவர் தரும் வாழ்வை முழுமையாகப் பெற்று அவரில் குடிகொள்ள தம் கரங்களை விரித்து நம்மை அழைக்கின்றார்.

அவரின் அழைப்புக்கு நாம் மறுமொழி கூறுகின்றோமா? ✝

நாம் அடிக்கடி களைப்பும் சோர்வும் அடைந்தாலும், இவற்றிலிருந்து கடவுள் நம்மை வெளியே கொண்டுவருகிறார்.

– புனித மேரி மெகிலோப்

### இன்றைய வாசகங்கள்:

திருத்தூதர் பணிகள்: 2: 14, 36-41

திருப்பாடல்: 23: 1-6

1 பேதுரு: 2: 20-25

யோவான்: 10:1-10

### வாரம் ஒரு வசனம்

இயேசுவே நமக்கு உண்மையான நிறைவை வழங்குவார்

INTERNAL CIRCULATION ONLY
BUL 18/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org